

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு 73

### மனித நேயம்

ஒன்றை மட்டும் திட்டவட்டமாகச் சொல்கின்றேன். ஆண்டவன் எங்கேயும் இல்லை. மக்களுடைய இதயத்தில் தான் - மனதில்தான் இருக்கிறார். நான் எத்தனையோ வெளிநாடுகளைச் சுற்றிப் பார்த்திருக்கின்றேன். உலகத்தின் பல பாகங்களையும் சுற்றி வந்திருக்கின்றேன். தமிழக மக்களுக்கு இருக்கிற மனித நேயம், கருணை, அந்த மனித இயல்பு வேறு யாருக்கும் எங்கேயும் கிடையாது. அதனால்தான் நம்முடைய தமிழ்நாட்டை 'வந்தாரை வாழ வைத்த தமிழகம்' என்று சொல்கிறார்கள்.

ஒருவனிடம் திறமை இருந்து, நல்ல எண்ணம், நல்ல மனிதத் தன்மையும் இருந்தது என்று சொன்னால் அவனுடைய மொழி பற்றியோ, சாதி பற்றியோ, எதைப் பற்றியும் தமிழக மக்கள் கவலைப்பட மாட்டார்கள்.

ஆகவே, இந்த மாதிரி உயர்ந்த குணம் உள்ள மக்களிடம் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற வரைமுறை இருக்கவேண்டும் இல்லை? இவர்களுக்கு ஏதாவது கெடுதல் செஞ்சா? துரோகம் செஞ்சா - அவர்களை ஆண்டவன் தண்டிக்காமல் விடவே மாட்டான். வினை விதைத்தவன் வினை அறுப்பான். இது உறுதி'

இவ்வாறு ரஜினிகாந்த் கூறியுள்ளார்.

### நண்பர்களுக்கு உதவ ரஜினி எடுத்த படம் 'வள்ளி'

நண்பர்களுக்கு உதவுவதற்காக ரஜினிகாந்த் 'வள்ளி' என்ற படத்தை எடுத்தார். கே.நட்ராஜ் டைரக்ட் செய்த இந்தப் படத்தில், ரஜினியின் நண்பர்கள் பலர் நடித்தனர்.

ஆரம்பகால நண்பர்கள் யாரையும் ரஜினி மறந்த தில்லை. படங்களில் நடித்து சூப்பர் ஸ்டாராக உயர்ந்த நேரத்தில், நண்பர்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று விரும்பினார். இதற்கான கதையை ரஜினியே எழுதினார்.

### பெண்ணின் போராட்டம்

ஒரு பெண்ணை காதலித்து, அவளை கர்ப்பிணி யாக்கிவிட்டு தலைமறைவாகிறான் ஓர் இளைஞன். அவன் அரசியல் செல்வாக்கு மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவன். அப்பாவிப் பெண்களை ஏமாற்றுவது என்பது அவனுக்கு பொழுதுபோக்கும்.

ஆனால் அந்தப் பெண் உண்ணாவிரதம் இருந்து தங்கள் காதலை ஊருக்கே தெரிய வைத்து அவனை பணிய வைக்கிறாள். துரோகியான காதலன், கணவனான மறுநிமிடமே அவளை கத்தியால் குத்திச் சாய்க்கிறாள், கதாநாயகி.

புரட்சிகரமான கதை அமைப்பைக் கொண்ட இந்தப் படத்தை, கே.நட்ராஜ் டைரக்ட் செய்தார். ரஜினி நடிப்புக் கல்லூரியில் படித்த காலத்தில் இருந்தே இவர் ரஜினியின் நண்பர். 'அன்புள்ள ரஜினிகாந்த்' படத்தை டைரக்ட் செய்தவர். இளையராஜா இசையமைத்தார். படத்தில் கௌரவ வேடத்தில் ரஜினியும் நடித்திருந்தார்.

இந்தப் படம் பெரிய அளவில் போகவில்லை என்றாலும் லாபம் வந்தது. அதை நண்பர்களுக்கு பிரித்துக் கொடுத்து மகிழ்ந்தார் ரஜினி.

### நட்ராஜ் பேட்டி

'வள்ளி' படம் உருவானது பற்றிய விவரங்களை டைரக்டர் கே.நட்ராஜ் வெளியிட்டார். அவர் கூறியதாவது:

'1992ஆம் வருடம் ரஜினி 'அண்ணாமலை' படத்தில் நடித்துக் கொண்டிருந்த நேரம். படத்தை சுரேஷ் கிருஷ்ணா இயக்கினார். நண்பன் என்ற முறையில் ரஜினி என்னிடம் 'நீயும் இந்தப் படத்தில் இரு' என்றார்.

அவரது 'டேஸ்ட்' எனக்குத் தெரியும் என்பதால், படத்தில் அது எதுவும் மிஸ் ஆகிவிடக்கூடாது என்பதற்காக ரஜினி என்னிடம் இப்படிச் சொன்னார்.

இதனால் 'அண்ணாமலை' படத்தில் அசோசியேட் டாக சேர்ந்து கொண்டேன். படம் நல்லவிதமாக வளர்ந்து முடிந்தது.

இந்த நேரத்தில் ரஜினி, அவரது நண்பர்களை அழைத்தார். இந்தப் பட்டியலில் விட்டால், வடிவேலு, தும்பு, பிரதீப், சக்தி, அசோக், ரவீந்திரநாத், ரகுநந்தன், சந்திரா, சால்வா, அமர் முல்லா, ராஜ்பகதூர் ஆகியோருடன் நானும் இடம்பெற்றிருந்தேன்.

ரஜினி எங்களிடம் 'உங்களுக்கு நான் ஒரு படம் நடித்துத் தர விரும்புகின்றேன். என்னிடம் கைவசம் ஒரு கதையும் இருக்கிறது. அதையே படமாக எடுக்கலாம். பட வேலைகளோடு நீங்களும் நடியுங்கள். நட்ராஜ் டைரக்ட் பண்ணட்டும். இது தொடர்பான வேலைகளை இனி மளமளவென தொடங்கி விடலாம்' என்றார்.

### திரைக்கதை

ரஜினியின் வேகம்தான் 'சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ்' வேகம் ஆயிற்றே. மறுநாளே படம் தயாரிப்பது தொடர்பான வேலைகளை ஆரம்பித்து விட்டார். அவர் எழுதி வைத்திருந்த கதையை என்னிடம் கொடுத்தார். நான் உதவி இயக்குனர்களுடன் பெங்களூர் சென்று, ஒரு வாரத்தில் திரைக்கதை தயார் செய்தேன். ரஜினி கதையுடன் வசனமும் எழுதினார். எந்த கேரக்டருக்கு யார் சரியாக இருப்பார்கள் என்று தேர்வு செய்தேன்.

படத்தில் நாயகி பிரியாராமன் 'வள்ளி' படத்தில்தான் அறிமுகமானார். இவரை தனது புதிய படத்தில் நடிக்க வைக்க, டைரக்டர் பாரதிராஜா ஏற்கனவே தேர்வு செய்து வைத்திருந்தார். ரஜினி கேட்டுக்கொண்டதால் பிரியராமனை எங்கள் படத்தில் அறிமுகப்படுத்த சம்மதித்தார் பாரதிராஜா.

### கௌரவ வேடம்

படத்தில் முதலில் ரஜினி நடிப்பதாக இல்லை. 'நண்பர்களுக்காக நீங்கள் தயாரிக்கும் படத்தில் நீங்கள் நடிக்காவிட்டால் எப்படி?' என்று உரிமையுடன் கேட்டோம். இதனால் ரஜினி கௌரவ வேடத்தில் நடிக்க சம்மதித்து, 5 நாட்கள் நடித்துக் கொடுத்தார்.

1993ஆம் ஆண்டு ஏப்ரலில் படப்பிடிப்பு தொடங்கியது. ஜுன், ஜுலை என படப்பிடிப்பு தொடர்ந்து ஆகஸ்டு மாதத்தில் படம் ரிலீஸ் ஆனது.

### 'பஞ்ச்'வசனம்

இந்தப் படத்தில் ரஜினி பேசிய 'பஞ்ச்' வசனங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்தது, மக்கள் இலவச மோகத்தில் இருப்பதை சுட்டிக்காட்டும் ரஜினி, 'அரசாங் கத்துக்கிட்ட இலவசமா வேட்டி - சேலை கேட்காதீங்க. வேலை வெட்டி கேளுங்க' என்று சொல்லும் காட்சிகளில் ரசிகர்கள் கைதட்டினார்கள். அதுமாதிரி காதலுக்கும் புது விளக்கம் சொல்வார். 'நீ விரும்புகிற பெண்ணைவிட உன்னை விரும்புகிற பெண் கிடைச்சாத்தான் வாழ்க்கை சந்தோஷமா இருக்கும்' படத்தில் நான் டைரக்ஷனை கவனித்ததுபோல, ரஜினியின் மற்ற நண்பர்கள் நடிப்பில் திறமை காட்டினார்கள். (தொடரும்)


OM SHAKTI ASTROLOGER & PSYCHIC

WORLD RENOWNED INDIAN ASTROLOGER

Pandit: OMKAR



Horoscope - Palmistry - Numerology - Face Reading

Give me your date of birth..................
Time of birth.................
Place of Birth...............
I will give Horoscope & Marriage Matching Chart

Celebrate all round Success with wellness
Health - Career- Education- Relationships

Are you suffering from?
Emotional/ Behavioral problems?
Misfortunes/ Debts/Obstacles/Stability issues?
Relationship issues?
Unknownfears? Or Stress?
Blocks in creativity or low confidence?
Experience Holistic Healing with Rudraksha Science Therapy

PRIVATE & CONFEDENTIAL

ஜோதிடம், முகஜோதிடம், கைரேகை, சாஸ்திர நிபுணர்

- பல தலைமுறைகளாக ஜோதிடம் பார்த்து வரும் குடும்பத்தினர்
- எந்த பிரச்சனையாக இருந்தாலும் அதற்கு உடனடியாக பரிகாரம் செய்து தீர்த்து வைக்கப்படும்
- வாழ்க்கையின் குழப்பங்கள் தீர ஓம் பிரகாஷ் அவர்களை சந்தியுங்கள்
- அகோரா சாமியார்களிடம் சென்று மந்திரங்கள் கற்று கொண்ட ஓம் பிரகாஷ்

அரசியல், உத்தியோகம், காதல் கல்யாணம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வழக்கு, உடல் நலம், திருமணம், அதிஷ்டகற்கள்(எங்களிடம் அதிஷ்ட மோதிரங்கள் கிடைக்கும்), குழந்தைகளின் கல்வி, லக்சுமி கடாட்சம், பில்லி, சூனிய மந்திர பிரச்சனைகள், கண்திருஷ்டி, செக்ஸ் பிரச்சனைகள், குழந்தை பாக்கியம்,வீட்டுப்பாதுகாப்பு, வேலை பிரச்சனைகள் என எல்லா பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு ஓம் பிரகாஷ் அவர்களை சந்தியுங்கள்

அகோரா சாமியார்களிடம் சென்று மந்திரங்கள் கற்று கொண்ட ஓம் பிரகாஷ்

மொழி : தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம்

647-781-5413

4525 Ebenezer Road, Unit # 31 BRAMPTON ON L6P 2K8
Gore Center - Inside Canadian Dollar Plus , Opposite Gurudwara
( THE GORE RD & EBENEZER RD )